FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8129390

1. District : Thanjavur
மாவட்டம்
PS: Vigilance and Anti-Corruption
காவல்நிலையம்
Year: 2026
ஆண்டு
FIR No.: 06/2026
மு.த.அ. எண்
Date: 13.7.2026
நாள்

2. (i) Act சட்டம்: BNSS
Sections பிரிவுகள்: 106 BNSS

(ii) Act சட்டம்: The Prevention of Corruption
Sections பிரிவுகள்: 7, 7A, 8 r/w 12 of

(iii) Act சட்டம்: Act 1988 (as amended in 2018)
Sections பிரிவுகள்: PC Act.

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 10.7.2026
Date to : நாள் வரை 11.7.2026

Time Period :
நேர அளவு
Time from : நேரம் முதல் 16.45 hrs
Time to : நேரம் வரை 01.45 hrs

(b) Information Received at PS. Date :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : நேரம் 13.07.2026 14.30 hrs

(c) General Diary Reference : Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : நேரம் 15.30 hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
ஒரத்தநாடு வேளாண் கை விரிவாக்க மையம், வேளாண்மை உழவர் நலத்துறை அலுவலகம், ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம். சுமார் 25 km அருகில்

Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address :
முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : G. Murugesan
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name K. Ramasekaran
தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth :
நாள் / பிறந்த ஆண்டு 16.10.1990
(d) Nationality : இந்தியன்
நாட்டினம்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue :
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Sr. Rev. Inspector
தொழில்
(g) Address : District Collectorate office, Thanjavur
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திரு. M. கணேசன் வி.ஏ.ஓ, வேளாண்மை உழவர் நலத்துறை (பொறுப்பு) ஒரத்தநாடு, 2. திரு. Ba. கார்த்திகேயன் இளங்கலைப்பயன், வட்டார வேளாண்மை விரிவாக்க மையம், ஒரத்தநாடு, 3. திரு. S. சிவக்காதலன் உழவர் வேளாண்மை

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
நிலையத்தில் ஒரத்தநாடு வட்டார வேளாண்மை விரிவாக்க மையம், தஞ்சாவூர்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

G1. Ann 13/7/26

P. 13/7/2026 FIR

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

13.7.2026.

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

P. RAMAVATHI

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் Inspector of Police.
Rank: நிலை .....No.எண் .....

VAC, Thanjavur.

FIR Contents in Column Number 12 of the Thanjavur V&AC Crime Number 06/2026, U/s 106 of BNSS and 7, 7A, 8 r/w 12 of PC Act 1988 (as amended in 2018)-ன்தொடர்ச்சி.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.....

இன்று 10.07.2026-ஆம் தேதி மதியம் 14.30 மணியளவில் தஞ்சாவூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், C பிரிவில் முதுநிலை ஆய்வாளராகப் பணிபுரிந்து வரும் திரு.G.அருண்பிரசாந்த் என்பவர் கொடுத்தப் புகாரைப் பெற்று வழக்குப் பதிவு செய்த விவரம் பின்வருமாறு, அனுப்புநர் G.அருண்பிரசாந்த், முதுநிலை வருவாய் ஆய்வாளர், C பிரிவு, மாவட்ட ஆட்சியரகம், தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, தஞ்சாவூர். அம்மா, நான், 10.07.2026 அன்று மதியம் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணியிலிருந்தபோது, தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுக்கா, தஞ்சாவூர் – ஒரத்தநாடு புறவழிச்சாலையில் இயங்கிவரும் ஒரத்தநாடு வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் விவசாயிகளுக்கு குறுவை சாகுபடி தொடர்பாக இடுபொருட்கள் மாண்ய விலையில் வழங்குவதற்கு விவசாயிகள் மற்றும் பொது மக்களிடமிருந்து ஒரத்தநாடு வேளாண்மை விரிவாக்க மைய அலுவலர்கள் கையூட்டாகப் பணம் வசூல் செய்துவருவதாக தஞ்சாவூர் மாவட்ட துணை ஆய்வுக் குழு அலுவலருக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி, அவர் எனக்கு கொடுத்த வாய்மொழி உத்தரவின்படி. மாவட்ட ஆய்வுக் குழு சார்பில் நானும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் DM பிரிவில் பணிபுரியும் முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு.R.வெங்கட்ராமன், தஞ்சாவூர் இருவரும் தஞ்சாவூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகம் சென்றும் பின் அங்கிருந்து காவல் ஆய்வாளர் திருமதி.P.பத்மாவதி அவர்கள் மற்றும் போலீஸ் பார்ட்டியினருடன் 15.00 மணிக்கு புறப்பட்டு, பிற்பகல் சுமார் 16,30 மணிக்கு மேற்படி ஒரத்தநாடு வேளாண்மை விரிவாக்க மைய அலுவலகத்திற்கு வந்து ஆங்காங்கே சந்தேகம் வராதவாறு நின்று கண்காணிக்கப்பட்டு சுமார் 16,45 மணிக்கு ஒரத்தநாடு வேளாண்மை விரிவாக்க மைய அலுவலகத்திற்குள் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் சோதனை நடவடிக்கை விவரம் பின்வருமாறு:

2) மேற்படி திடீர் சோதனையின் போது மாவட்ட துணை ஆய்வுக்குழு சார்பாக ஆஜரான அலுவலர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குழுவில் இருந்த அலுவலர்கள் விபரம்:

(1) திரு.G.அருண்பிரசாந்த், வயது 36/2026, முதுநிலை வருவாய் ஆய்வாளர், சி-பிரிவு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர் மாவட்டம்,

(2) திரு.R.வெங்கட்ராமன், வயது 46/2026, முதுநிலை வருவாய் ஆய்வாளர், DM பிரிவு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர் மாவட்டம்.

(3) திருமதி.P.பத்மாவதி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர்.

3) மேற்படி வேளாண்மை உதவி இயக்குநர் மற்றும் வட்டார வோளண்மை விரிவாக்க மைய அலுவலகமானது தஞ்சாவூர் – ஓரத்தநாடு புறவழிச்சாலையில் மேற்குப் பக்கத்தில் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மைய அலுவலக வளாகத்திற்குள் அமைந்துள்ளது. இந்த வளாகத்தில் ஓரத்தநாடு வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், மற்றும் வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் ஒழுங்குமுறை விற்பனை கூடம் ஆகியவை செயல்பட்டு வருகிறது, இவற்றில் உதவி இயக்குநர், வேளாண்மை விரிவாக்க மைய அலுவலகம் வடக்கு திசை பார்த்தவாறு அமைந்துள்ள அரசுக்கு சொந்தமான RCC கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அதற்கு நேரெதிரில் கிழக்குப் பார்த்தவாறு ஓரத்தநாடு வட்டார வேளாண் விரிவாக்க மையம் செயல்பட்டு வருகிறது.

4) மேற்படி ஓரத்தநாடு வேளாண் உதவி இயக்குநர் அலுவலக வராண்டா நிலைக்கதவிற்கு அடுத்து சுமார் 20X20 அளவுள்ள உதவிமையம் உள்ளது. அந்த அறையில் மேற்கு பார்த்தவாறு டேபிள் போடப்பட்டுள்ளது, அதற்கு எதிர்த்தாற்போல் சாக்கு மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. அந்த அறையில் வேளாண் இடுபொருட்கள் வாங்குவதற்கு விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்காக சுமார் பத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் நின்றிருந்தார்கள். உதவி மைய அறைக்கு நேரெதிரில் வடக்குப் பார்த்தவாறு பதிவு வைப்பறை-1 உள்ளது, பூட்டப்பட்டுள்ளது. உதவி மைய அறையில் போடப்பட்டிருந்த டேபிளில் அமர்ந்து பணிசெய்து கொண்டிருந்த, பின்னர் பெயர் விவரம் கேட்டுத் தெரிந்த திரு.P.சிங்காரவேல், வயது 48/2026, த/பெ,தாயுமானவன், என்பவரிடம் விசாரிக்க தான் கரைமீண்டார்கோட்டை, ராகவாம்பாள்புரம், வாண்டையார் இருப்பு ஆகிய கிராமங்கள் இணைந்த வேளாண் உதவி மையத்தின் உதவி வேளாண்மை அலுவலராகப் பணிபுரிந்து வருவதாகவும் இன்று ஓரத்தநாடு உதவி வேளாண் இயக்குநர் அலுவலகத்திற்கு ஆய்வுக்கூட்டத்திற்காக வந்திருப்பதாகவும் தெரிவித்தார். மேற்படி நபரை சோதனை செய்ய, அவர் தனது லேப்டாப் பேக்கிலிருந்து ரூ.500 x 43=21500/,, 200 x 7=1400, 100 x 6=600 ஆகக் கூடுதல் ரூ.23,500/- எடுத்து ஆஜர் செய்தார். அது தொடர்பாக விளக்கம் கேட்க, விவசாயிகளுக்கு குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தில் இடுபொருட்கள் வழங்கியத் தொகை என்றும், வேளாண்மை விரிவாக்க மையத்தில் செலுத்துவதற்காக வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்படாததால் அந்தப் பணம் அவரிடமிருந்து விசாரணைக்காகக் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக ஆய்வுக்குழு அலுவலரால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

மேற்சொன்ன சிங்காரவேலுக்கு அருகில் பணி செய்து கொண்டிருந்த பின்னர் பெயர் விபரம் கேட்டு தெரிந்த செல்வி.சிவபாரதி, CCE Staff, தெக்கூர், என்பவரிடம் விசாரணை செய்ய அவர் பயனாளர்களிடம் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்துகொண்டிருப்பதாகத் தெரிவித்தார். அந்த நபரை சோதனை செய்ய அவரிடம் பணம் எதுவும் இல்லை. உதவி மைய வளாகத்தில் நின்றிருந்த பயனாளர்களை விசாரித்ததில் விண்ணப்பம் சமர்ப்பிக்க வந்ததாக தெரிவித்தனர். அவர்களை சோதனை செய்து அவர்களிடம் விவரம் கேட்டு அனுப்பிவைக்கப்பட்டனர். அவர்களின் விபரம் பின்வருமாறு

வ. எண்.	விபரம்
1.	திரு. வேதையன், வயது 52/2026, த/பெ. தங்கராசு, எண். 231, தொண்டைமான் தெரு. திருமங்கலக்கோட்டை கீழையூர், ஒரத்தநாடு தாலுகா, தஞ்சாவூர் மாவட்டம்
2.	திரு. ரெ. கோவிந்தராசு, வயது 74/2026, த/பெ. ரெங்கசாமி, தொண்டைமான் தெரு, திருமங்கலக்கோட்டை கீழையூர், ஒரத்தநாடு தாலுகா, தஞ்சாவூர் மாவட்டம்.
3.	திரு. துரை, வயது 37/2026, த/பெ. கோவிந்தராசு, தொண்டைமான் தெரு, திருமங்கலக்கோட்டை கீழையூர், ஒரத்தநாடு தாலுகா, தஞ்சாவூர் மாவட்டம்.
4.	திரு. விஜயகுமார், வயது 36/2026, த/பெ. தங்கையன், தலையாமங்கலம் (Po), தாந்தோணி, குலமங்கலம் பஞ்சாயத்து, ஒரத்தநாடு தாலுகா, தஞ்சாவூர் மாவட்டம்.

5) உதவி மைய அலுவலகத்திற்கு தெற்கே, பதிவு வைப்பறைக்கு மேற்கே ஒரு அறை காணப்பட்டது. அந்த அறையில் இருந்தவர்கள் விபரம் பின் வருமாறு.

வ. எண்.	விபரம்	காணப்பட்ட தொகை	தொகைக்கான காரணம்
1.	திருமதி. குயில்ரோஜா, வயது 28/2026, க/பெ. சிவானந்தம், உதவி வேளாண்மை அலுவலர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம்.	ரூ. 400/-	தனது சொந்த செலவிற்காக வைத்துளள பணம் என்று தெரிவித்ததால் காரணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
2.	திரு. அருண்ராஜ், வயது 27/2026, த/பெ. சுரேஷ் குமார், உதவி வேளாண்மை அலுவலர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம்.	ரூ. 2000/-	தனது சொந்த செலவிற்காக வைத்துளள பணம் என்று தெரிவித்ததால் காரணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

6) உதவி மைய வளாகத்திற்கு கிழக்கே கணினி அறை காணப்பட்டது. அந்த அறையில் இருந்தவர்களின் விபரம் பின்வருமாறு.

வ. எண்.	விபரம்	காணப்பட்ட தொகை	தொகைக்கான காரணம்
1.	திரு. சந்தோஷ்குமார், வயது 24/2026, த/பெ. செந்தில்குமார், CCE Staff, வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம்.	ரூ. 600/-	தனது சொந்த செலவிற்காக வைத்துளள பணம் என்று தெரிவித்ததால் காரணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
2.	திருமதி. சர்மிளா, க/பெ. மதியழகன், CCE Staff, வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம்.	ரூ. 300/-	தனது சொந்த செலவிற்காக வைத்துளள பணம் என்று தெரிவித்ததால் காரணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
3.	திருமதி. இந்து, வயது 28/2026, க/பெ. இளையபாரதி, CCE Staff, வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம்.	ரூ. 250/-	தனது சொந்த செலவிற்காக வைத்துளள பணம் என்று தெரிவித்ததால் காரணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
4.	செல்வி. அகல்யா, வயது 28/2026, த/பெ. இளங்கோவன், CCE Staff, வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம்.	ரூ. 400/-	தனது சொந்த செலவிற்காக வைத்துளள பணம் என்று தெரிவித்ததால் காரணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

7) மேற்சொன்ன கணினி அறைக்கு கிழக்கே மாடிக்கு செல்லும் படிக்கட்டு அமைந்துள்ளது. கட்டத்தின் முதல் தளத்தில் கூட்டம் நடத்தப்படும் அறை, பதிவறைகள் காணப்படுகின்றன. முதல் தளத்தில் நபர்கள் யாரும் காணப்படவில்லை. முதல் தளத்தில் உள்ள அறைகளை சோதனை செய்ததில் சந்தேகத்திற்கிடமான பணமோ, பொருளோ காணப்படவில்லை.

8) உதவி மைய அறைக்கு மேற்கு பக்கம் இரண்டு வாசல்களுடன் சுமார் 30X30 அளவுடைய அறை உள்ளது. அவ்வறை உதவி விதைச்சான்று அலுவலரின் அறையாகும். அந்த அறையில் இருந்தவர்கள் விபரம் பின்வருமாறு.

வ. எண்.	விபரம்	காணப்பட்ட தொகை	தொகைக்கான காரணம்
1.	திரு. ராமன், வயது 55/2026, த/பெ. ரெங்கசாமி,	ரூ.1440/-	தனது சொந்த செலவிற்காக வைத்துளள பணம் என்று தெரிவித்ததால் காரணம்

	உதவி விதைச் சான்று அலுவலர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம்		ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
2.	திரு. இளங்கோவன், வயது 55/2026, த/பெ. வேம்பையன், உதவி விதை சான்று அலுவலர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம்	ரூ. 2920/-	தனது சொந்த செலவிற்காக வைத்துளள பணம் என்று தெரிவித்ததால் காரணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
3.	திருமதி. பொற்செல்வி, க/பெ. பிரபு, இளநிலை உதவியாளர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம்.	ரூ. 470/-	தனது சொந்த செலவிற்காக வைத்துளள பணம் என்று தெரிவித்ததால் காரணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

9) விதை சான்று அலுவலகத்திற்கு மேற்கே தோட்டக்கலைத்துறை அலுவலகம் அமைந்துள்ளது. அந்த அறை கதவு சாத்தப்பட்டிருந்தது. அந்த அறையில் யாரும் காணப்படவில்லை. அவ்வறையில் டேபிள் சேர்கள் போடப்பட்டிருந்தன. அவ்வறையை சோதனை செய்ததில் சந்தேகத்திற்கிடமான பொருளோ, பணமோ காணப்படவில்லை.

10) மேற்சொன்ன தோட்டக்கலைத்துறை அலுவலக அறைக்கு தெற்கே கிழக்குப் பார்த்தவாறு வாசல் அமைந்துள்ள உதவி வேளாண் இயக்குநர் அலுவலகம் காணப்பட்டது. அவ்வறையை சோதனை செய்ததில் சந்தேகத்திற்கிடமான பணமோ பொருளோ காணப்படவில்லை. உதவி இயக்குநர் அறைக்கு எதிரே வடக்குப்புறத்தில் தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் அலுவலகம் அமைந்துள்ளது. அந்த அறையில் இருந்தவர்கள் விபரம் பின்வருமாறு

வ. எண்.	விபரம்	காணப்பட்ட தொகை	தொகைக்கான காரணம்
1.	திரு. பி. சின்னதுரை, வயது 53/2026, த/பெ. பிச்சைமுத்து, துணை வேளாண்மை அலுவலர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், ஒரத்தநாடு, தஞ்சாவூர்.	ரூ. 4500/-	தனது சொந்த செலவிற்காக வைத்துளள பணம் என்று தெரிவித்ததால் காரணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
2.	திருமதி. செ. சாந்திபிரியா, க/பெ. செந்தில்குமார், தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், ஒரத்தநாடு, தஞ்சாவூர்.	500/-	தனது சொந்த செலவிற்காக வைத்துளள பணம் என்று தெரிவித்ததால் காரணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
3.	திரு. ச. சிவபாலன், த/பெ. சக்திவேல்,	ரூ. 400/-	தனது சொந்த செலவிற்காக வைத்துளள பணம் என்று தெரிவித்ததால் காரணம்

	தோட்டக்கலைத்துறை அலுவலர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், ஒரத்தநாடு, தஞ்சாவூர்.		ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
4.	திருமதி. மு. திவ்யா, த/பெ. முருகையன், தோட்டக்கலைத்துறை அலுவலர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், ஒரத்தநாடு, தஞ்சாவூர்.	ரூ. 600/-	தனது சொந்த செலவிற்காக வைத்துளள பணம் என்று தெரிவித்ததால் காரணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

11) உதவி வேளாண் இயக்குநர் அலுவலகத்திற்கு வெளியில் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் நின்றிருந்த இருசக்கர வாகனம் ஒன்றின் அருகில் ஸ்ரீகணேஷ் என்ற கவருக்குள் சுருட்டி வைக்கப்பட்டிருந்த ரூபாய் நோட்டுக்கள் இருந்ததை எடுத்து எண்ணிப் பார்க்க அதில் ரூ.500 x32=16,000/-, ரூ.200 x7= 1400/-, ரூ.100 x8 =800 ஆகக் கூடுதல் ரூ,18,200/- இருந்தது. அந்தப் பணத்திற்கு யாரும் உரிமை கோராததால் அந்தப் பணம் வேளாண் விரிவாக்க மைய அலுவலர்களுக்கு கையூட்டாகக் கொடுக்க வைத்திருந்த பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது.

12) பின்னர் உதவி வேளாண் இயக்குநர் அலுவலகத்திற்கு வடக்கே சுமார் 50x50 அளவுடைய RCC கட்டிடம் உள்ளது. இக்கட்டிடத்தில் ஒரத்தநாடு, பாப்பாநாடு, மூர்த்தியாம்பாள்புரம், தெக்கூர், வடசேரி, மற்றும் திருமங்கலகோட்டை ஆகிய துணை வேளாண்மை விரிவாக்க மையங்களுக்குரிய குறுவை விவசாய இடுபொருட்கள் வைப்பு வைக்கப்பட்டுள்ளது. அந்த அறையை சோதனை செய்தபோது அங்கு நின்றுகொண்டிருந்த பின்னர் பெயர் விவரம் கேட்டுத் தெரிந்த 1) திரு.அ.சக்திவேல், த/பெ.ஆறுமுகம், ஆதிதிராவிடர் தெரு, காட்டுக்குறிச்சி என்பவரிடம் விசாரணை செய்ய குறுவை இடுபொருட்கள் பெறுவதற்காக விண்ணப்பம் கொடுக்க வந்ததாகவும், தன்னிடம் உள்ள பணம் ரூ.1900/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்தப் பணம் குறித்து விளக்கம் கேட்க தனது வீட்டுச் செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்ததால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவரிடமே அந்தப் பணம் ஒப்படைக்கப்பட்டது. அங்கு நின்றிருந்த மற்றொரு நபரான பின்னர் பெயர் விவரம் கேட்டுத் தெரிந்த திரு.கணபதி, வயது 32/26, த/பெ.தர்மலிங்கம், புலவன்காடு என்பவரிடம் விசாரிக்க அவரும் விண்ணப்பம் கொடுக்க வந்ததாகவும், தன்னிடம் உள்ள செலவினத் தொகை ரூ.745ஐ எடுத்து ஆஜர் செய்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்தப் பணம் ரூ.745/- அவரிடமேத் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அந்த அலுவலகத்தில் நின்றிருந்த மற்றொரு நபரான பின்னர் பெயர் விவரம் கேட்டுத் தெரிந்த திரு.அரங்கநாதன், வயது 61/2026,

த/பெ.வடிவேல், பொன்னாப்பூர் கிழக்கு, தஞ்சாவூர் என்பவரை விசாரிக்க நுண் சத்து உரம் வாங்க வந்திருப்பதாகவும், கண்காணிப்பாளரிடம் ரூ.2,500/- கொடுத்திருப்பதாகவும் மூட்டையை எடுத்து செல்வதற்காக நின்றிருப்பதாகவும் தெரிவித்தார். மேலும், அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.12,500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அவரிடம் அந்தப் பணம் குறித்து விளக்கம் கேட்க தான் இன்று மதியம் விவசாய செலவிற்காக தனது வங்கி ATM-யிலிருந்து ரூ.15,000/- எடுத்ததாகவும், நுண் சத்து உரத்திற்காக கொடுத்தது போக மீதப் பணம் ரூ.12,500/- வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்தப் பணம் அவரிடமேத் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

13) மேலும் அந்த அறையில் வாசலுக்கு அருகே வடக்குப் பார்த்தவாறு போடப்பட்டிருந்த டேபிளில் அமர்ந்து பணிசெய்துகொண்டிருந்த பின்னர் பெயர் விவரம் கேட்டுத் தெரிந்த திரு.R.ஜெயன், வயது 40/2026, த/பெ.ராஜேந்திரன், 17/2, அவரிவிளை, கேசவபுரம், திருவெட்டாறு அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் என்பவரிடம் மேற்கொண்ட விசாரணையில், தான் பாப்பாநாடு துணை வேளாண்மை மையக் கிடங்கு மேலாளராகப் (பிணையம்) கடந்த 23.02.2026 முதல் பணிபுரிந்து வருவதாகவும், தங்கள் அலுவலகத்திற்குரிய வேளாண் இடுபொருட்கள் ஒரத்தநாடு வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் வைத்து விவசாயிகளுக்கு மாண்ய விலையில் விற்பனை செய்யப்படுகிறது. இன்று எங்களது கிடங்கிற்கும் வட்டார விரிவாக்க மையத்தில் உள்ள இருப்பு குறித்த Adjustment Bill தாக்கல் செய்வதற்காக வந்திருப்பதாகவும் தெரிவித்தார். அவரிடம் சோதனை செய்ய அவரிடம் இருந்த ரூ.650/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்தப் பணம் குறித்து விளக்கம் கேட்க அந்தப் பணம் தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாகத் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்தப் பணம் ரூ.650/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

14) மேலும், அந்த அறையில் நின்றுகொண்டிருந்த பின்னர் பெயர் விவரம் கேட்டுத் தெரிந்த திரு. G.பாண்டியன், வயது 30/2026, த/பெ. கோவிந்தராஜ், 98/பி, வடக்குத் தெரு, புதூர் ஒரத்தநாடு, தஞ்சாவூர் என்பவரிடம் விசாரணை செய்ய அவர் தான் பாலமுத்தூர் தலைமையிட உதவி வேளாண்மை அலுவலராகப் பணிபுரிந்து வருவதாகவும், தங்களது உதவி வேளாண் விரிவாக்க மையத்திற்குரிய குறுவை விவசாய இடுபொருட்கள் ஒரத்தநாடு வட்டார வேளாண்மை விரிவாக்க மையக் கிடங்கில் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாகவும், இன்று 10.07.2026 மதியம் விவசாய இடுபொருட்களைப் பெற்றுச்செல்வதற்காக வந்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரிடம் சோதனை செய்ய அவர் ரூ.2,000/-த்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்தப் பணம் குறித்து

விளக்கம் கேட்க தனது வீட்டு செலவிற்காக வைத்திருப்பதாகத் தெரிவித்தார், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்தப் பணம் அவரிடமேத் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

15) பின்னர், அந்த அறையின் வாசலுக்கு அருகில் தெற்குப் பார்த்தவாறு போடப்பட்டிருந்த டேபிளில் அமர்ந்து பணிசெய்துகொண்டிருந்த பின்னர் பெயர் விவரம் கேட்டுத் தெரிந்த திரு.N.காளிதாசன், வயது 51/2026, த/பெ.நாகராஜ், ராஜாளிவிடுதி, திருவோணம் தாலுக்கா, தஞ்சாவூர் என்பவர் ஆய்வுக்குழு அலுவலர்களைக் கண்டதும் தான் அமர்ந்திருந்த இருக்கையை விட்டு எழுந்து தனது இருக்கைக்குப் பின்புறம் ஓடிச்சென்று அங்கு மூட்டைகளுக்கிடையில் ஏதோ ஒன்றைத் தூக்கி எறிந்தார். ஆய்வுக்குழு அலுவலர் அதை எடுத்துப் பார்க்க அதில் ரூ.500, ரூ.200, ரூ,100 நோட்டுக்கள் அடங்கிய பணக்கட்டு இருந்தது, அதனை ஆய்வுக்குழு அலுவலர் எடுத்து எண்ணிப்பார்க்க அதில் 1) 500x153 = ரூ.76500, 2) 200x11= 2200, 3) 100x6=600 ஆக மொத்தம் ரூ.79,300/- இருந்தது. அந்தப் பணம் குறித்து விளக்கம் கேட்க உதவி வேளாண் அலுவலர்கள் மூலம் விவசாய இடுபொருட்களை விற்பனை செய்த பணம் என்றும் மற்ற கிடங்கு மேலாளர்களுக்கு கணக்கிட்டு அலுவலர்களுக்குக் கொடுக்க வைத்திருந்த பணம் என்றும், அலுவலர்களைக் கண்டதும் பயத்தில் தூக்கிப் போட்டதாகவும் கூறினார். அவரது விளக்கம் ஏற்கும்படியாக இல்லாததால் அந்தப் பணம் ரூ.79,300/- இடுபொருள் வழங்குவதற்காக விவசாயிகளிடமிருந்து கையூட்டாகக் கேட்டுப்பெற்றப் பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் ஆய்வுக்குழு அலுவலர்களால் கைப்பற்றப்பட்டது.

16) மேலும், அவரை விசாரித்தபோது, அவர் ஓரத்தநாடு வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் கடந்த செப்டம்பர்-2025 முதல் கண்காணிப்பாளராகப் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவர் அமர்ந்து பணிசெய்துகொண்டிருந்த டேபிளை சோதனை செய்தபோது அந்த டேபிளின் வலதுபக்க டிராயரில் இருந்த MAYIL MARK என்று அச்சிடப்பட்ட மஞ்சள் நிற பையில் இரப்பர் பேண்ட் போட்டு பண்டில்களாக இருந்த பணத்தைக் கைப்பற்றி எண்ணிப் பார்க்க அந்த கட்டுகளில் 1) பென்சில் கொண்டு எழுதப்பட்ட துண்டு சீட்டுகளுடன் இரப்பர் பேண்ட் போட்ட கட்டு ஒன்றில் ரூ.100x1=100, 20x4=80. 10x6=60 கூடுதல் ரூ,240/-, 2) மற்றொரு கட்டில் ரூ,500x55=27500, 100 x3 = 300, 50 x1=50, 20 x1=20 கூடுதல் ரூ.27,870/-, 3) இரப்பர் பேண்ட் போட்டவாறு வைக்கப்பட்டிருந்த ரூ.500 x199=99,500/-, 500 x3=1500, 200 x41=8200, 100 x31 =3100/-, 50 x1=50 கூடுதல் ரூ.1,12,350/-, 4) மற்றொரு கட்டில் ரூ,500 x 59 = 29500/-, 100 x10=1000, 50 x3=150, 20 x 1=20 கூடுதல் ரூ.30,670/- இருந்தது. அந்த பணக்கட்டுக்களின் மொத்த கூடுதல் ரூ,2,50,430/- ஆகும்.

17) மேலும், திரு.காளிதாசன் அமர்ந்து பணிசெய்துகொண்டிருந்த இருக்கைக்குப் பின்னால் இருந்த மரபீரோவினை சோதனை செய்தபோது, அந்த மர பீரோவில் மேலடுக்கில் வைக்கப்பட்டிருந்த P.கணேஷ்ராஜ், A.சூரியா என அச்சிடப்பட்ட திருமணத் தாம்பூலப்பையில் சில ஆவணங்களுடன் இரப்பர் பேண்டு போட்டவாறு கத்தைகளாக பணம் வைக்கப்பட்டிருந்தது. மேற்படி பையில் இருந்த பணத்தை எடுத்து ஆய்வுக்குழு அலுவலர் அவர்களால் எண்ணிப் பார்த்தபோது, 1) 200 x 16= 3200, 20 x 1=20 கூடுதல் 3,220/-, 2) 100 x 17=1,700/-, 3) 500 x100=50,000/-, 4) 500 x100=50,000/-, 5) 500 x100=50,000/-, 6) 500 x100=50,000/-, 7) 500 x 100=50,000/-, 8) 500 x76= 38,000/-, 9) 500 x23= 11,500/-, 10) 200 x45=9,000/-, 11) 100 x88=8,800/-, 12) 50 x14=700/- ஆகக் கூடுதல் ரூ. 3,22,920/- இருந்தது மேற்சொன்ன தொகைகள் (Rs.2,50,430 + Rs.3,22,920 = Rs.5,73,350/-) குறித்து கண்காணிப்பாளர் திரு.காளிதாசன் என்பவரிடம் விளக்கம் கேட்க அந்தப் பணம் கடந்த 30.06.2026ஆம் தேதி முதல் 10.07.2026 ஆம் தேதி வரை ஓரத்தநாடு வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்திற்குட்பட்ட உதவி வேளாண் அலுவலகம் மூலமாக விவசாயிகளுக்கு இடுபொருட்கள் விற்பனை செய்த பணம் என்றும், அந்தத் தொகைகளை அந்தந்த உதவி வேளாண் அலுவலர்களிடம் ஒப்படைப்பதற்காக வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரது விளக்கத்திற்குரிய ஆவண ஆதாரங்கள் ஏதுமில்லாததால் மேற்படி பணத்தைக் கையூட்டுப் பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக ஆய்வுக்குழு அலுவலரால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

18) பின்னர் அலுவலகப் பதிவேடுகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் தொடர்பாக உதவி வேளாண் இயக்குநர் அவர்களிடம் விபரங்கள் கேட்க, கீழ்கண்டப் பதிவேடுகளை ஆஜர் செய்தார்.

(1) பணப்பதிவேடு, வே.வி.மையம், ஓரத்தநாடு 2026-27 என்று எழுதப்பட்ட பதிவேடு. (பக்கம் 1 முதல் 368 வரை உள்ளது, 38 ஆம் பக்கம் வரை எழுதப்பட்டுள்ளது.

(2) வட்டார வேளாண்மை விரிவாக்க மையம், ஓரத்தநாடு என்று எழுதப்பட்ட Staff Attendance Register (1 முதல் 13 பக்கம் வரை உள்ளதில் 7 ஆம் பக்கம் வரை எழுதப்பட்டுள்ளது)

(3) CCE Staff Attendance - 2026 o/o ADA Orathanadu - (1 முதல் 13 பக்கம் வரை உள்ளதில் 7 ஆம் பக்கம் வரை எழுதப்பட்டுள்ளது).

(4) குறுவை உயிர் உரம் பெற்ற விவரம்-2026-27 என பேனாவால் எழுதப்பட்ட 19 நபர்களின் பெயர்களுடன் கூடிய கணக்கீடுகள் குறிக்கப்பட்ட தனித்தாள் (4 பக்கங்களில் முதல் பக்கம் மட்டும் எழுதப்பட்டுள்ளது)

20) இந்த திடீர் சோதனையின் முடிவில் ஓரத்தநாடு வேளாண்மை விரிவாக்க மையத்தில் ரூ. 5,73,350/-உம், ஓரத்தநாடு உதவி இயக்குநர் அலுவலகத்தில் ரூ. 41,700/-உம் ஆகக் கூடுதல் ரூ. 6,15,050/- கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறைகள் 11.07.2026 அதிகாலை 01.45 மணிக்கு முடிக்கப்பட்டது.

21) இந்த திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட மேற்படி பணம், ஆவணம், வாக்குமூலங்கள், தயார் செய்யப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஆஜர்படுத்துகிறேன். இது குறித்து சட்டப்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். இது குறித்து சட்டப்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். (sd) G.அருண்பிரசாந்த், முதுநிலை வருவாய் ஆய்வாளர், 'C' பிரிவு, மாவட்ட ஆட்சியரகம், தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர். Sir, the above mention petition with seized money in the proceedings cum mahazar has been received from Tr. G.Arunprasanth, Senior Revenue Inspector, 'C'Section, Collectorate, Thanjavur, on 13.07.2026 at 14.30 hrs, found prima facie for the allegation of the complaint. Since, the matter is intimated to the SP/CR, V&AC, Chennai and obtained permission from the SP/CR, V&AC, Chennai and registered a case in Thanjavur V&AC Crime Number. 06/2026 U/s 106 of BNSS and 7, 7A, 8 r/w 12 of PC Act 1988 (as amended in 2018) on 13.07.2026 at 15.30 hrs (sd) P. Padmavathi, Inspector of Police, V&AC, Thanjavur.

Sir, the original FIR along with the Complaint, Surprise Check Proceedings and statements of accused are sent to the Principle District and Sessions Judge, Court, Thanjavur, other copies sent to the senior officers and concerned investigation officer.

13/7/26

Inspector of Police,
Vigilance and anti-Corruption
Thanjavur.